செய்தி வெளியீடு எண். 23-2016 நாள்: 12.09.2016

விழுப்புரம் மாவட்டத்தில் பாரத பிரதமரின் சுய வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் கிராமப்புற மாற்றுத்திறனாளிகளுக்கு 40 விழுக்காடு வங்கி கடன் மானியம் வழங்கப்பட உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தகவல்.

******

பாரத பிரதமரின் சுய வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ், உற்பத்தி மற்றும் சேவை பிரிவின் கீழ் சுய தொழில் செய்வதற்காக ரூ.25,000/- முதல் ரூ.10.00 இலட்சம் வரை வங்கிக் கடன் வழங்கிட பரிந்துரைக்கப்படுகிறது. மேற்படி திட்டம் விழுப்புரம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட தொழில் மையம் மற்றும் கதர் மற்றும் கிராம தொழில் வாரியம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் சுய தொழில் புரிவதற்கு வங்கி கடன் மானியமாக கிராமப்புற மாற்றுத்திறனாளிகளுக்கு மத்திய அரசால் 35 சதவீதமும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் 5 சதவீதமும் ஆக மொத்தம் 40 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. நகர்ப்புற மாற்றுத்திறனாளிகளுக்கு, வங்கி கடன் மானியமாக மத்திய அரசால் 25 சதவீதமும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் 5 சதவீதமும் ஆக மொத்தம் 30 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

எனவே, சுய தொழில் புரிய விருப்பமுள்ள மாற்றுத்திறனாளிகள் பாரத பிரதமரின் சுய வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் www.kviconline.gov.in என்ற இணையதள முகவரியில் PMEGP e Portal என்ற பகுதியில் இணையதளம் மூலம் நேரடியாக விண்ணப்பித்து பயன்பெற வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.